




# ஒரு காடு ஒரு கட்டிடம்

இந்த வாரம் சென்னையின் இரண்டு முக்கியமான இடங்களுக்கு எங்கள் பரீக்ஷா குழுவுடன் நாடகம் போடச் சென்றிருந்தேன். உலக மகளிர் தினத்தையொட்டி, நீ ஆண் நீ பெண் என்ற சிறு நாடகத்தை முதலில் ஐ.ஐ.டியிலும், அடுத்து பெசன்ட் நகர் ராஜாஜி பவனிலும் நிகழ்த்தினோம். ஐ.ஐ.டியும், ராஜாஜி பவனும் எனக்குப் பல பழைய நினைவுகளை எழுப்பின.

ஐ.ஐ.டி வளாகம்தான் சென்னை நகரில் எஞ்சியிருக்கிற ஒரே காட்டுப் பகுதி. ராஜ் பவன் தொடங்கி தரமணி வரையில் நீளும் கிண்டி ரிசர்வ் காடு இது. நடுவே காந்தி மண்டபம், ராஜாஜி நினைவு மண்டபம், பக்தவத்சலம் நினைவிடம், காமராஜ் நினைவிடம், குழந்தைகள் பூங்கா, பாம்புப் பூங்கா, புற்று நோய் நிலையம் என்று பல அமைப்புகள் கொஞ்சம் காட்டை அழித்துவிட்டபோதும் இன்னும் இது பெரிய காடுதான். இங்கே வேறு மிருகங்கள் எதையும் பார்க்க முடியாவிட்டாலும் இன்னமும் நிறைய மான்களைப் பார்க்கலாம்.

ஜெர்மன் நாட்டு உதவியுடன் நேரு காலத்தில் நிர்மாணித்த உயர் கல்வி நிலையமான ஐ.ஐ.டி இன்னும் மேட்டுக்குடியினருக்கான இடமாகவே கணிக்கப்படுகிறது. எழுபதுகளில் எனக்கு ஐ.ஐ.டி.யைப் பழைய சைக்கிள் வாங்குவதற்கான இடமாகத்தான் முதலில் அறிமுகம். அங்கே தங்கிப் படிக்கும் மாணவர்களும் ஆசிரியர்களும் , வளாகத்துக்குள் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குச் செல்ல சைக்கிள் வைத்திருப்பார்கள். வருடக் கடைசியில் ஐ.ஐ.டி.யை விட்டுச் செல்லும்போது பல மாணவர்கள் சைக்கிள்களைக் குறைந்த விலைக்கு விற்றுவிட்டுப் போய்விடுவார்கள். தெரிந்தவர்கள் மூலம் முன்கூட்டியே சொல்லிவைத்து நல்ல சைக்கிள்களை மலிவு விலையில் வாங்கலாம். எனக்குத் தெரிந்த பலர் அப்படி வாங்கியிருக்கிறார்கள்.

இந்த முறை சென்றபோது கவனித்தேன். ஐ.ஐ.டி.யில் இன்னமும் சைக்கிள்கள் நிறையவே இருக்கின்றன. ஆனால் முன்பைவிடக் கணிசமாகக் குறைந்துவிட்டன. கார்களும் டூவீலர்களும் பெருகியிருக்கின்றன.

மறைந்த என் நண்பர் தினமணி ஆசிரியர் ஆர்.எம்.டி. சம்பந்தம், ஐ.ஐ.டியில் இருக்கும் நீச்சல் குளத்தில் தினசரி காலை நீச்சல் பயிற்சிக்குச் செல்லும் வழக்கம் உடையவர். அங்கே உறுப்பினர் அனுமதி கிடைப்பது கடினம். நிறைய செல்வாக்கும் பரிந்துரைகளும் தேவைப்படும். சமூகத்தில் செல்வாக்குடைய பலர் அங்கே நீச்சல் அடிக்க வருவார்கள். காலையில் அவர்களை அங்கே சந்தித்துவிட்டு அலுவலகம் வந்த பின்னர் சம்பந்தம் பல கதைகளைச் சொல்வார். பத்திரிகையில் அவர்கள் விரும்பும் செய்திகளை வரவழைக்க எப்படி அந்தக் காலைச் சந்திப்பில்கூட முயற்சிகள் நடக்கும் என்பது அவர் சொல்லித் தெரியவரும். அந்தச் சந்திப்புகளில் பல முக்கியமான செய்திகளுக்கு சில துப்புகளும் கிடைக்கும்.

எண்பதுகளில் நான் ஐ.ஐ.டிக்குச் சில நண்பர்களுடன் , இன்னும் சில நண்பர்களைப் பார்க்கச் சென்றதுண்டு. நண்பர் எழுத்தாளர் நாகார்ஜுனன் ஐ.ஐ.டி.யில் படித்தவர். அவரும் நானும் ஐ.ஐ.டி. சமூகவியல் பேராசிரியர் அம்பிராஜனைப் பார்க்கச் செல்வோம். ஐ.ஐ.டி.யில் ஹ்யுமானிட்டீஸ் எனப்படும் கலைப் பாடங்கள் ஆங்கிலம், வரலாறு, சமூகவியல் போன்றவை கூட உண்டு என்பது எனக்கு அப்போதுதான் தெரியும். சந்தித்த சிறிது நேரத்துக்குள் விவாதங்கள் ஆழமான விஷயங்களுக்குள் போய்விடும். எங்கள் பரிக்ஷா குழுவில் உறுப்பினராக இருந்த பாஸ்கர் அப்போது ஐ.ஐ.டி.யில் மெஸ் மேனேஜராகத் தற்காலிக வேலையில் இருந்தார். நாடக ஏற்பாடுகள் தொடர்பாக அவரைப் பார்க்கச் சென்றிருக்கிறேன். ஹாஸ்டல் மெஸ்ஸில் சாப்பிட்டிருக்கிறேன். அப்போது அங்கே மெஸ்ஸில் அசைவ உணவு கிடையாது. இப்போதும் அதே தீண்டாமை நீடிக்கிறதா என்று தெரியவில்லை.

ஐ.ஐ.டியில் மிக அழகான இரண்டு அரங்குகள் இருக்கின்றன. ஒன்று பிரும்மாண்டமான திறந்த வெளி அரங்கு. இன்னொன்று சி.எல்.டி எனப்படும் சிறிய சென்ட்ரல் லெக்சர் தியேட்டர். மூடிய அரங்கு. சி.எல்.டி.யில் நான் கருத்தரங்குகளில் சிறப்புப் பேச்சாளராகப் பேசியிருக்கிறேன். இந்த முறை நாடகமும் அதில்தான் நடத்தினோம். கடந்த இருபது வருடங்களில் நான் அதிகம் ஐ.ஐ.டிக்குள் நுழையவில்லை. என் நாடக ஆசான்களில் ஒருவரான பாதல் சர்க்கார் ஐ.ஐ.டி.யில் பயிலரங்கம் நடத்த வந்திருப்பதாகக் கேள்விப்பட்டபோது அவரை சந்திக்கச் சென்றேன். கலையிலிருந்து பணத்தைத் தூக்கி எறிகிற அவருடைய மக்கள் நாடகக் கோட்பாட்டுக்கும் ஐ.ஐ.டி.க்கும் என்ன தொடர்பு இருக்க முடியும் என்று அவரிடமே விவாதித்தேன். இங்கிருந்து எல்லாருமா அமெரிக்காவுக்கு ஓடிப் போய்விட முடியும் என்று அவர் சிரித்தார்.

அப்போதெல்லாம் ஐ.ஐ.டி. என்றாலே மாணவர் தற்கொலைகளும், அமெரிக்காவுக்கு மூளை ஏற்றுமதியும்தான் நினைவுக்கு வரும். எண்பதுகளுக்குப் பின் பல வருடங்கள் சென்னை ஐ.ஐ.டி. செய்திகளில் அதிகமாக அடிபட்டதற்குக் காரணம் அங்கிருந்த தலித் பேராசிரியர் வசந்தா கந்தசாமி ஐ.ஐ.டிக்குள் நடத்திய சமூக நீதிப் போராட்டம். தொண்ணூறுகளில் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை மத்திய அரசில் மண்டல் கமிஷன் பரிந்துரைப்படி வி.பி. சிங் அறிவித்தபோது அதற்கு எதிராகக் கடுமையான கருத்துப் பிரசாரம் செய்தவர் சென்னை ஐ.ஐ.டி.யின் முன்னாள் இயக்குநரான பி.வி. இந்திரேசன்.

அருமையான இயற்கைச் சூழல், வசதியான கட்டடங்கள், குடியிருப்புகள், மைதானங்கள், அரங்குகள் என்று ஐ.ஐ.டி.க்கு இருக்கும் வசதிகளில் பத்தில் ஒரு பங்குகூட அதை விடப் பழமையான சென்னைப் பல்கலைக் கழகத்துக்குக் கிடையாது. உண்மையில் ஒவ்வொரு கல்வி வளாகமும் ஐ.ஐ.டி.க்கு இருக்கும். வசதிகளோடும் சூழலோடும் இருப்பது அவசியம்.

சுற்றுச் சூழல் பற்றிய அக்கறை பொதுவாக நமக்கு போதுமான அளவு இல்லை. இருந்திருந்தால், சென்னையின் மையப் பகுதியில் ஓமந்தூர் ராமசாமி தோட்டம் எனப்படும் அரசினர் தோட்டக் காட்டை அழித்து எம்.எல்.ஏ. ஹாஸ்டல்கள், முன்னாள் சட்டசபை, வருங்கால மருத்துவமனை என்று பிருமாண்டமான கான்க்ரீட் கட்டடங்களைக் கட்டி நகரின் நுரையீரல் பகுதி இது என்று ராஜாஜியால் வர்ணிக்கப்பட்ட அந்தக் காட்டைக் காலி செய்திருக்க மாட்டோம்.

இன்னொரு பக்கம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்று நம்பி எதிர்க்க வேண்டாததை எதிர்க்கும் தவறுகளும் பொதுவாக (இது மிகக் குறைவுதான்) நடக்கின்றன. தீவிரமான சுற்றுச்சூழல் ஆர்வலனாகிய நான் அப்படிப்பட்ட ஒரு எதிர்ப்புக்கு எதிராக வேலை செய்து சென்னையில் ஒரு கட்டடத்தைக் கட்டி முடிக்க உதவி செய்யும் நிலை ஏற்பட்டது. அந்தக் கட்டடம்தான் பெசன்ட் நகரில் இருக்கும் ராஜாஜி பவன்.

மத்திய அரசு அலுவலகங்கள் ஆங்காங்கே வாடகைக் கட்டடங்களில் இயங்குவதைக் குறைத்து ஒரே வளாகத்தில் இருக்கச் செய்யும் நோக்கத்தில் , நுங்கம்பாக்கம் சாஸ்திரி பவனைப் போல் தென் சென்னையில் பெசன்ட் நகரில் ராஜாஜி பவன் கட்டும் வேலை எண்பதுகளில் ஆரம்பித்தது. பல மாடிக் கட்டடத்தின் செங்கல் வேலை முழுக்க முடிந்து பூசு வேலை தொடங்கும் நிலையில் கட்டடத்தைச் சுற்றி இருக்கும் வீடுகளின் உரிமையாளர்கள் சிலரும் சில சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்ததில் இடைக்காலத் தடையால் வேலை முடக்கப்பட்டது. இந்தக் கட்டடத்தால் சூழலுக்கு ஆபத்து ஏதுமில்லை. இது குடியிருப்புகளைவிடக் குறைவான மின்சாரம், நீரைத்தான் பயன்படுத்தும். கட்டடத்தைச் சுற்றிப் பசுஞ்சோலை உருவாக்கப்படும் என்றெல்லாம் மத்தியப் பொதுப்பணித் துறை கூறியது. கட்டட வேலையைப் பாதியில் நிறுத்தினால், மொத்தச் செலவு அதிகரித்துவிடும். கட்டடத்தைக் கட்டி முடித்துவிடலாம், நீதிமன்றம் அலுவலகம் கூடாது என்று உத்தரவிட்டால், இதை அலுவலர் குடியிருப்பாக அப்படியே மாற்றிவிட முடியும் என்று அமைச்சரிடம் சொல்லிக் கட்டட வேலையை முடிக்க நிதி ஒதுக்கக் கோரினார்கள்.

அமைச்சருக்கு 20 நிமிடங்களில் இதைப் புரியவைக்க ஒரு வீடியோ படம் எடுத்துத் தரும் வேலையை என்னிடம் ஒப்படைத்தார்கள். எங்கள் பரீக்ஷா நாடகக் குழு உறுப்பினரான வைத்தியநாதன் , அப்போது மத்தியப் பொதுப் பணித் துறையில் ஆர்க்கிடெக்டாக இருந்தார். இன்னொரு உறுப்பினரான பாஸ்கர் அதே பிரிவில் டிராஃப்ட்ஸ்மனாக இருந்தார். கட்டடத்தால் சூழல் சிக்கல் எதுவும் இல்லை என்று என்னை முதலில் ஏற்கச் செய்யுங்கள் என்று தலைமை ஆர்க்கிடெக்டிடம் சொன்னேன். அவர் பொறுமையாக ஒவ்வொரு விவரத்தையும் விளக்கிய பின் வீடியோ எடுத்துத் தர ஒப்புக்கொண்டு செய்தேன். கைப்பிடிச் சுவர் இல்லாத படிக்கட்டுகளில் நான்கு மாடி ஏறி இறங்கி சிரமப்பட்டு எடுத்த படம்.

அமைச்சர் அதைப் பார்த்துவிட்டு நிதி ஒதுக்கினார். கட்டட வேலை செலவு பலமாக அதிகரிக்காமல் சீக்கிரமே முடிந்தது. கட்டடத்தால் சூழல் பாதிப்பு இல்லை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இப்போது பெசன்ட் நகர் பகுதி மக்கள் பசுஞ் சோலைக்கு நடுவே இருக்கும் ராஜாஜி பவனை விரும்புகிறார்கள். அங்கே இருக்கும் ரயில்வே பயண முன்பதிவு நிலையம் பெருமளவு மக்கள் ஆதரவைப் பெற்றிருக்கிறது.

அந்தக் கட்டடத்துக்குள் அதன் பின் பல முறை சென்றிருக்கிறேன். ஒவ்வொரு முறையும் மகிழ்ச்சிதான். ஊழியர்களுடன் கூட்டத்தில் பேசியது, நாடகம் போட்டது, அங்கே இருக்கும் மத்திய அரசின் பப்ளிகேஷன் டிவிஷனில் பல நல்ல நூல்களை மலிவு விலையில் வாங்க முடிவது என்று மகிழ்ச்சிக்குப் பல காரணங்கள். என் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய மறைந்த நவீன ஓவியர் ஆதிமூலம், ஓவியர் விஸ்வம், ஓவியர் வீர. சந்தானம், ஓவியர் டிராட்ஸ்கி மருது ஆகியோர் பணியாற்றிய நெசவாளர் சேவை மையம் அங்கே இருக்கிறது.

அந்த மையம் மத்திய அரசின் நல்ல பணிகளில் ஒன்று. சுதந்திர இந்தியாவில் நேருவின் வழிகாட்டுதலில் உருவான கலை, இலக்கியம் சார்ந்த நல்ல அமைப்புகளில் அதுவும் ஒன்று. மத்திய அரசில் இப்படி சின்னச் சின்னதாகப் பல விஷயங்கள் இன்னும் இருக்கின்றன. இதற்கு நிகரான அணுகுமுறையை மாநில அரசுகளிடம் பொதுவாகக் காண முடிவதில்லை. மத்திய அரசின் கட்டடங்கள்கூட மாநில அரசுகளின் கட்டடங்களைவிட அழகுணர்ச்சியுடனும் சூழல் அக்கறையுடனும் அதிகத் தரத்துடனும் உருவாக்கப்படுகின்றன. சென்னையிலேயே இதற்கான சான்றுகளைப் பல இடங்களில் பார்க்கலாம்.

பழைய நினைவுகளுடன் ராஜாஜி பவனில் நாடகம் நடத்தி முடித்துவிட்டு வெளியே வந்தபோது, பக்கத்துக் கட்டடத்தில் வாழ்ந்த முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரியும் சமூக ஆர்வலருமான அ.கி. வேங்கடசுப்பிரமணியன் நினைவும், எதிர்ப்புறச் சாலையில் இருக்கும் குடியிருப்பில் வாழ்ந்த சக பத்திரிகையாளர் நண்பர் ஆர்.எம்.டி. சம்பந்தம் நினைவும் வந்தன . அ.கி.வே.தான் எனக்கு 49 ஓ பற்றி முதலில் அறிவுறுத்தியவர். சம்பந்தம் என் பத்திரிகை வாழ்க்கை நெடுக முக்கியப் பங்காற்றியவர்களில் ஒருவர். இருவரும் இல்லை. வீடுகள் இருக்கின்றன. கட்டடங்கள் இருக்கின்றன. அவையும் ஒரு நாள் போய்விடும்.

நினைவுகள் இருக்கின்றன. கடைசியில் நாமும் விட்டுச் செல்லக்கூடியது நினைவுகளை மட்டும்தானோ?

சென்னை நம்ம சென்னை
மார்ச் 16-31,2012 , தினமணி